1980 பிப்ரவரி 13]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 60 ஆயிரம், 70 ஆயிரம் மக்கள் உள்ள நகராட்சிப் பகுதியிலே உள்ள மருந்தகங்களை மருத்துவ மனைகளாக மாற்றும் திட்டம் உண்டா? திருநெல்வேலி மாவட்டத்திலே புளியங்குடி என்ற கிராமத்திலே உள்ள மருந்தகத்தின் கட்டடம் உடைந்த கட்டடமாக இருக்கிறது .... (மணியடிக்கப்பட்டது).

மதுரை மாவட்டத்தில் மருத்துவமனைகளுக்கு ஆலோசனைக் குழுக்கள்.

*வினா எண். 140—திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஆலோசனைக் குழு போடப்பட்டுள்ளதா ?

(ஆ) அக் குழுக்களில் எதிர்க்கட்சி சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) மதுரை மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஆலோசனைக் குழு போடப்படவில்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இதற்கு முன் பெல்லாம் மருத்துவமனைகளுக்கு ஆங்காங்கு ஆலோசனைக் குழுக்கள் இயங்கிக் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த ஆட்சி வந்து இரண்டரை ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஆலோசனைக் குழுக்கள் ஏன் போடப்படவில்லை என்பதை அறிந்துகொள்ள விரும்புவதோடு, அம்மாதிரிக் குழுக்களிலே சர்வ கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து அவைகள் அமைக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண். 1494, சுகாதாரம், நாள் 22—8—1978 மற்றும் அரசாணை (நிலை) எண். 64, சுகாதாரம், நாள் 14—1—1980-ல், திருத்தியமைக்கப்படவிருக்கும் மருத்துவ மனைகளின் ஆலோசனைக் குழுக்களில் கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (1) மாவட்ட ஆட்சியாளர், (2) மாவட்ட குடும்ப நல தாய் சேய் நல அலுவலர், (3) முன்னாள் படை வீரர்கள் நலத்துறையின்

உதவ் இயக்குநர், (4) நிர்வாகப் பொறியாளர் 12 பேர்கள், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மேலவை உறுப்பினர் இவர்களில் யாராவது இருவர். இதைத்தவிர பொது மக்கள் அணியிலே, சோஷியல் ஒர்க்கிலே அக்கறை உள்ள 2, 3 பேர்கள் பங்கு பெறுவார்கள். அந்த அந்த இடத்திற்குத் தகுந்தபடி எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் அதிலே பங்கு பெறுவார்கள்

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU

மின்சார உற்பத்தி.

*வினா எண் 122. : திரு சின்னசேலம் மா. சுப்பிரமணியம், திரு. என். கிட்டப்பா. திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது மாநிலத்தில் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) இப்பொழுது எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : (அ) நமது மாநிலத்தில் மின்சார உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு மின்சார வாரியம் 7 மின்உற்பத்தி நிலையங்களின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுள்ளது. 10 மின் திட்டங்களை மத்திய மின் ஆணைக்குழு/மத்திய திட்டக்குழு ஆகியவற்றின் அனுமதிக்காக அனுப்பியுள்ளது. 8 மின் திட்டங்களை ஆராய்வதிலும். அதற்கான திட்டப்படிமங்களைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளது.

(ஆ) 1978-79-ம்ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் 661 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்தது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே வேறு ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது கேரளத்திலே மேற்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்ற ஆறுகளை கிழக்கு நோக்கி ஓடக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்வதற்கு குழு அமைக்கப்பட்டு நமது அரசும் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதாகக் குறிப்பிட்டார்கள். முன்னாலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே அந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக நான் அறிகிறேன். அப்படி